# தரமற்ற மருந்துகளுக்கு அரசாங்கம் ஆதரவளிக்கிறதா? எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நாடாளுமன்றில் கேள்வி



நாட்டில் தரம் குறைந்த மருந்துகள் பயன்படுத் தப்படுவதில்லை, என சுகாதார அமைச்சர் மீண்டும் வலியுறுத்தியுள்ள போதிலும், தரம் குறைந்த மருந்து களால் மற்றுமொரு மரணம் ஏற்பட்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள் ளார்.

தரமற்ற மருந்துகளால் நாட்டில் ஏற்பட்ட உயி ரிழப்பு களுக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத் தல் அதிகார சபை பொறுப்புக்கூற வேண்டும், என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

நாடாளுமன்றில் இன்று இது தொடர்பாக உரை யாற்றிய அவர், இவ்வாறான சம்பவங்கள் தொடர் பாக அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை முன்னெ டுக்க வேண்டும்.

நான் சபையில் இரண்டு நாட்களுக்கு முன்னர் ப்ரோபபோல் என்ற மருந்து தொடர்பாக எச்சரிக்கை விடுத்திருந்தேன்.

இவ்வாறான மூன்று வகையான தரமற்ற, சுகாதா ரத்திற்கு ஏற்புடையதல்லாத மருந்துகள் தொடர்பாக நான் கூறியபோது, அவை சிறந்த மருந்துகளாகும் என்று சபையில் வைத்து சுகாதார அமைச்சர் தெரி வித்தார்.

இப்போது, நேற்றும் இந்த மருந்தினால் ஒருவர் உயிரிழந்துள்ளார். தரமற்ற மருந்துகளுக்கு அரசாங் கம் ஆதரவளிக்கிறதா? என்று சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பினார்.

தரமற்ற மருந்துகள் தொடர்பாக முறையிட ஓரிடமும் இல்லை. இது தொடர்பாக ஆராய ஒரு நிறுவனம் கூட இல்லை. தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதி-கார சபை, திருடர்களின் கூடாரமாக மாறியுள்ளது. தலைவரும், நிர்வாக அதிகாரியும் இவற்றுக்குப் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும்.

நேற்று ஒரு தாய் இறந்துள்ளார். இந்த இறப்புக்கு நஷ்ட ஈடு கொடுப்பதால் மட்டும், அவரது பிள்ளை-களும் கணவரும் நன்றாக வாழ்ந்துவிடுவார்களா? எனவே, இது தொடர்பாக அரசாங்கம் தீவிரமான நடவடிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 23 வெள்ளிக்கிழமை 07.07.2023 கதிர் 20



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV

காலைக்கதிர் TV YouTube தளம்


# சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் புதைகுழி தோண்டும் பணி நடைபெறவில்லை

## சான்றுகளும் அழியலாம் – சுமந்திரன் எம்.பி



முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழி அகழ்வில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தமிழீழ விடுதலைப்புலி அமைப்பின் முன்னாள் பெண் போராளிகளுடையதாக இருக்கலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளா.

தனது அவதானிப்பின்படி, உரிய சர்வதேச நிபுணத் துவத்தின் அடிப்படையில் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுகள் நிகழவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

2➤

# மண்டைதீவுத் தேவாலயக் கிணற்றுக்குள் 60 இளைஞர் கொல்லப்பட்டு வீசப்பட்டனர்

## சிறிதரன் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு



மண்டைதீவு தூமையார் ஆலயக் கிணற்றில் அறுபதுக் கும் மேற்பட்ட இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு வீசப் பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறி தரன் தெரிவித்துள்ளார்.

இன்று நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு ஆற்றிய உரையின்போதே அவர் இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

2➤

# சர்வதேசப் பொறிமுறையின் கீழ் விசாரணைகள் இராணுவ வீரர்களுக்குப் பாதகமாக அமையும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எச்சரிக்கை

சர்வதேசப் பொறிமுறையின் கீழ் விசாரணைகள் இடம்பெற வேண்டும், என்று ஜெனிவா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளமை எமது நாட்டு இராணுவ வீரர்களுக்குப் பாதகமாக அமையுமென நாடாளுமன்ற உறுப் பினர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரை யாற்றியபோதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

எமது நாட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச பொறிமுறையின் கீழ் விசாரணை இடம்பெற வேண்டும் என்று ஜெனிவா பிரேரணையில் குறிப் பிடப்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கம் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளது.

எனினும், இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் ஊடாக எமது இராணுவத்தினருக்கு எதிராக ஆதாரங்களைத் திரட்டினால், அவர்களை சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டு செல்ல முடியுமா என்பதை நாம் ஆராய வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவ லகத்திற்கும் நாம் அன்றே எதிர்ப்பினை



இங்கு வெளியிட்டோம்.

ஏனெனில், இதில் எவரேனும் ஒரு வர் இராணுவத்தினருக்கு எதிராகப் பொய்ச் சாட்சி கூறுவாராயின், குறித்த இராணுவ வீரரை கைது செய்து சர்வ-தேச நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியும். ரோம் உடன்படிக்கையில் நாமும் கைச்சாத்திட்டுள்ளமையால், இவ்வாறான செயற்பாடுகள் எதிர்க் காலத்தில் இடம்பெறலாம்.

எனவே, இவை நடக்காமல் இருக்க அரசாங்கம் வழிவகை செய்ய வேண் டும். அத்தோடு, யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த பாதுகாப்புத் தரப்பி னருக்கும் அரசியல்வாதிகளுக்கும் சில நாடுகள் பயணத்தடை விதித்துள்ளன.

இது முற்றாகச் சட்டவிரோதமான செயற்பாடாகும், எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பிரதமர் மோடியை அவதூறாகப் பேசிய வழக்கு ராகுல் காந்தியின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி

தேர்தல் பிரச்சாரத்தின்போது மோடி யைப் பெயர் குறிப்பிட்டு அவதூறாக பேசிய வழக்கில் கைது செய்யப்பட்டு, சூரத் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்கவேண் டும், என்ற ராகுல் காந்தியின் கோரிக் கையை குஜராத் உயர்நீதிமன்றம் நிரா கரித்துள்ளது.

ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையை ஒத்தி வைப்பதற்கு மறுப்பு தெரிவித்த குஜராத் உயர் நீதிமன்றம், ராகுல் காந்தியின் மேல் முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு ராகுல் காந்திக்கும், 2024 தேர்தலுக்குத் தயாராகிவரும் காங்கிரஸ் கட்சிக்கும் பெரும் இழப்பாக அமையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது வழக்கை விசாரித்த குஜராத் உயர்நீதிமன்றம், ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு இடைக்கால தடையினை விதிக்க மறுப் புத் தெரிவித்துள்ளதோடு, கோடை விடு முறைக்குப் பின் இறுதித் தீர்ப்பு வழங்கப் படும் எனவும் அறிவித்துள்ளது.

# புலிகளின் தலைவர் உயிரிழந்தமை உறுதி! பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப் பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாக ரன் உயிரிழந்து விட்டார் என்பது உறுதி எனவும் அதற்கான ஆதாரங்கள் பாது காப்பு அமைச்சிடம் உள்ளன எனவும், தேசியப் பாதுகாப்பினை அடிப்படையா கக் கொண்டே குறித்த ஆதாரங்களை வெளியிடாமல் இருப்பதாகவும்

2➤




- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# இந்தியா செல்லும் ஜனாதிபதிக்கு அழுத்தங்களை வழுங்கவேண்டும்!

## யாழ் மீனவ அமைப்புகள் கோரிக்கை

இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வுக்கு, இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன் பிடியைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தங்களை வழங்க வேண்டும் என, யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது சம்மேளனத்தின் உப தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியப் பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று இந்தியா செல்லவுள்ளார். இவ்வாறு இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்துமாறு இந்திய பிரதமருக்கு வலியுறுத்த வேண்டும், என அவர் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமல்லாது, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக ஜனாதிபதிக்கு அழுத்தத்தை வழங்குவதோடு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அழுத்தங்களை வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த நெடுந்தீவு கடற்தொழில் சமாசத்தின் உறுப்பினர் சி.றொபின்சன் குருஸ், நெடுந்தீவில் சுமார் 850க்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் அத்து மீறிய இந்திய ரோலர் படகுகளினால் சுமார் 2 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட கடற்தொழில் உபகரணங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன எனவும், இந்தியா ரோலர் படகுகளின் அத்து மீறிய செயற்பாடு காரணமாக எமது வளங்கள் பாதிக்கப்படும் நிலையில் இதுவரை 250 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, எனவும் தெரிவித்துள்ளார்.

பல குடும்பங்களில் மனைவிமார்களுடைய தாலியை அடகு வைத்து பலர் வலைகளை வாங்கியுள்ள நிலையில் இந்திய ரோலர் படகுகளினால் குறித்த வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை வலி வடக்கு கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் நீகன் கருத்துத் தெரிவிக்கையில், உள்ளூரில் அனுமதியற்ற சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக தடை செய்யப்பட்ட வலைகளில் சிறிய மீன்கள் பெருமளவு அகப்படுவதனால் அவற்றினை வீசிவிட்டுச் செல்கிறார்கள்.

அதன் காரணமாக கடற்றொழிலை நம்பி இருக்கும் பாரம்பரிய மீனவர்கள் கடலில் மீன் இனங்கள் பெருகாத நிலையில் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது எனவு அவர் தெரிவித்தார்.

## பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று





யாழ்ப்பாணம் - பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய நவகுண்ட பக்ஷ சம்புரோக்ஷண புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

## நெல் சாகுபடியால் நாட்டின் சேமிப்பு 300 மில்லியன் - மஹிந்த அமரவீர

எமது நாட்டில் நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகளால் இவ்வருடம் 300 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியை சேமிக்க முடிந்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு தேசிய விவசாயக் கல்விக் கண்காட்சியை நடத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், உத்தேச நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் விவசாய அமைச்சில் நடைபெற்றது.

2022 ஆம் ஆண்டில் 800,000 மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்த அரிசி ஒரு வருடத்தில் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மிகப்பெரிய தொகையாகும்.

மேலும் ஜனவரி முதல் இறுதி வரை அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை. இந்த 800,000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



“இந்த வருடம் இதுவரையில் ஒரு நெல்மணியை கூட இறக்குமதி செய்யவில்லை. கடந்த இலாப் பருவத்திற்கும், பிரதான பருவத்திற்கும், 2023 ஆம் ஆண்டுக்கான இரசாயன உரங்களையும் விவசாயிகளுக்கு அரசாங்கம் பல சலுகைகளையும் வழங்கியது.

அதிகப்படியான அரிசியைப் பயன்படுத்துவது பற்றி பரந்த அளவில் சிந்திக்க வேண்டியது அவசியம் மற்றும் ஏற்றுமதி செய்யக்கூடிய அரிசி வகைகளின் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது என்று அமைச்சர் மேலும் கூறினார்.

## புலிகளின் தலைவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காக சில குழுக்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான குழுக்கள் தொடர்பில் பாதுகாப்புதுறை மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்து விட்டார் என்பது உறுதி. அவருடன் மிக நெருக்கமாகச் செயற்பட்ட கருணா, தயா மாஸ்டர் உள்ளிட்டவர்கள் இதற்குச் சாட்சி எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் உரிய தகவல்கள் உள்ளன. எனவே, இது தொடர்பில் மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருக்க தேவையில்லை. அதனை விட முக்கியத்துவம் செலுத்த வேண்டிய பல்வேறு காரணிகள் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச நிபுணத்துவத்தின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது, முல்லைத்தீவு மாவட்ட நீதவான், பொலிஸார் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த அகழ்வு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்,

அகழ்வின்போது அந்தந்த நேரத்தில் கிடைக்கும் பொருட்கள் தடயப்பொருள்களாக வைக்கப்படுவதாகவும், இது சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் நிகழவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார். இதனால் பல சான்றுகள் அழியும் அபாயம் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல பெண் போராளிகளினுடைய சீருடைகள் அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு ஆணொருவரின் எச்சமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதவான் மேற்பார்வையின் கீழ் இந்த அகழ்வு நடைபெற்றாலும்கூட, சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் இடம்பெற்றிருந்தால் ஏற்புடையதாக இருந்திருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## மண்டைதீவுத் .................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குத்தொடுவாயில் பல பெண் போராளிகளின் உடல்கள் எனக் கூறப்படும் பல மனித எச்சங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. இந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் தமிழ்ப் போராளிகளின் உடல்கள் எடுக்கப்படுவது போல, மண்டைதீவு தூமையார் ஆலயக் கிணற்றையும் துப்புரவு செய்தால் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட இளைஞர்களின் உடல்களை எடுக்கமுடியும்.

இதன் காரணமாகவே இலங்கை இராணுவத்தினர் அந்த இடத்தில் உள்ள மக்களின் காணிகளைப் பறித்து வைத்திருக்கின்றனர், என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனால், குறித்த காணிகளுக்குச் சொந்தக்காரர்கள் இலங்கையின் பல பிரதேசங்களில் அகதிகளாக வாழ்கிறார்கள்.

நல்லிணக்கம் சமாதானம் குறித்து அதிகம் பேசும் அரசாங்கம், தொடர்ந்தும் அப்பாவி மக்களது காணிகளை அபகரிக்க நினைப்பது மிக மோசமான செயற்பாடாகும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
- maalaikkathir@gmail.com

# இறந்தவர்களுக்காவது உரிய நீதி கிடைக்குமா? காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி

கிளிநொச்சி மாவட்டத்தின் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி கனகரஞ்சினியின் ஊடகச் சந்திப்பு இன்று நடைபெற்றிருந்தது.

நாங்கள் பல வருட காலமாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி, பல அரச அதிகாரிகள், ஜனாதிபதி மற்றும் ஐ.நா.விடம் கூட முறையிட்டும் எமக்கு இதுவரையில் உதிய தீர்வு கிடைக்கப் பெறவில்லை.

தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள ஓ.என்.பி. அலுவலகத்தில் எம்மைப் பதிவிடுமாறு அழைப்பு விடுத்திருந்த போதிலும், நாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுவருகிறோம்.

நாளைய தினம் கிளிநொச்சியில் ஓ.என்.பி. அலுவலகத்தில் எமது எதிர்ப்பைத் தெரிவிக்கவுள்ளோம், என்று அவர் அந்தச் சந்திப்பின்போது குறிப்பிட்டார்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கை இடம்பெற்று வரும் நிலையில்,



இறந்தவர்களுக்காவது உரிய நீதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? என்பதில் கூட சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

# கிராம சேவகர்களுக்கும் சமாதான நீதவான் பணி

கிராம உத்தியோகத்தர்களும் இப்போது சமாதான நீதவானின் பணிகளை பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும், என வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நிரந்தர மற்றும் தற்போது சேவையில் இருக்கும் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் ஒவ்வொரு நிர்வாக கிராம உத்தியோகத்தரும் இலங்கைக் குடியரசின் சமாதான நீதவானாகக் கடமையாற்ற வேண்டும், என அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சீர்திருத்த அமைச்சரால், 1978 ஆம் ஆண்டின் இலக்கம் 2 இல், நீதித்துறைச் சட்டத்தின் 61 ஆவது வாசிப்பின் கீழ் , 45 ஆவது பிரிவில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

# உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தின் வரைவு விரைவில் வெளியிடப்படும்

உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தின் முதல் வரைவு விரைவில் வெளியிடப்படும் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணம் ஏற்கனவே தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மனுஷ நாணயக்கார தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்மொழியப்பட்ட வேலைவாய்ப்புச் சட்டத்தின் வரைவு, பொருளாதார வளர்ச்சியை அடையும் நோக்கத்துடன், பங்குதாரர்களின் விரிவான ஆலோசனைக்குப் பிறகு தயாரிக்கப்பட்டது எனவும் அவர் கூறியுள்ளார்.

# இரத்தக் காயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்பு

மாத்தறை, திக்கொடை பிரதேசத்தில் இன்று அதிகாலை இரத்தக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய கவிந்து பெர்னாண்டோ என்ற நபரே அவரது வீட்டுக்கு முன் வீதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நண்பர் ஒருவரின் வீட்டுக்கு நேற்று மாலை பேருந்தில் சென்றிருந்த குறித்த இளைஞர், இன்று அதிகாலை வீடு திரும்புவதாகப் பெற்றோரிடம் தெரிவித்திருந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், அவர் தனது வீட்டுக்கு முன் வீதியில் இருந்து இன்று அதிகாலை 3 மணியளவில் இரத்தக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீதி விபத்தில் சிக்கி அவர் உயிரிழந்தாரா, அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்பது தொடர்பாகப் பிரேத பரிசோதனையின் பின்னரே தெரியவரும் என்று கூறிய பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாதாளக் குழுக்களின் அட்டகாசம் அதிகரிப்பு கட்டுப்படுத்தக் களமிறக்கப்பட்டது எஸ்.ரி.எப்.



தென் மாகாணத்தில் பாதாளக் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. தினமும் அவர்களுக்குள் மோதல் இடம்பெற்று கொலைகள் பெருகி வருகின்றன.

இவர்களைக் கட்டுப்படுத்தி, கொலையாளிகளைக் கைது செய்வதற்காகப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் களத்தில் குதித்துள்ளனர்.

அவர்களுக்குப் பயந்து, தென் மாகாணத்தைச் சேர்ந்த அதிகமான பாதாளக் குழுவினர் கொழும்புக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஆஸி - இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் மாணவர் ஒன்றுகூடலும் நிதிக்கொடுப்பனவும்





அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களுக்கும் மேலாக இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவிகளைப் பெறும் வடமாகாண மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவும், தகவல் அமர்வும் அண்மையில் வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றன.

வவுனியா பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதியும், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இம்மாதம் முதலாம் திகதியும் , முல்லைத்தீவில் இரண்டாம் திகதி விசுவமடுவில் திறன்விருத்தி கேட்போர் கூடத்திலும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

வவுனியாவில் நீண்டகாலமாக இயங்கும் நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் தலைவர் திரு. த. கணேஷ் தலைமையிலும், உதவி பிரதேச செயலாளர் திருமதி பிரியதர்சினி சஜீவன் முன்னிலையிலும் வவுனியா பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வுகள் நடந்தது.

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இயங்கும் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் திரு. க. சுசீந்தி, மாவட்ட உதவிச்செயலாளர் திருமதி கிருஷாந்தி கமலராஜன் முன்னிலையில் யாழ். அரச அதிபர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இம்மாதம் முதலாம் திகதி நடந்தது.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் முதலாவது தலைவரும், கணக்காய்வாளருமான திரு. ஏ.வி. முருகையா மற்றும் தற்போதைய தலைவர் திரு. லெ. முருகபூபதி மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் திருவாளர்கள் வீ. தனபாலசிங்கம், இ. பாரதி, ரவிவர்மா ஆகியோரும் உரையாற்றினர்.

யாழ். சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் திட்ட முகாமையாளர் திரு. சி. இன்பரூபனின் வரவேற்புரையுடனும் அலுவலர் திரு. ந. பாஸ்கரனின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மறுநாள் 2 ஆம் திகதி முல்லைத்தீவு - விசுவமடு திறன் விருத்தி மண்டபத்திலும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவி பெறும் மாணவர்களும் அவர்களின் தாய்மாரும் உரையாற்றினர். கல்வி நிதியத்தின் பணிகளை சித்திரிக்கும் ஆவணப்படக்காட்சியும் இடம்பெற்றது.

வவுனியாவிலும், முல்லைத்தீவிலும் போரினால் பெரிதும் பாதிப்புற்ற மேலும் சில மாணவர்களும் இந்த நிகழ்வின்போது இந்தத்திட்டத்தில் இணைத்துக் கொள் எப்பட்டனர். இம்மாணவர்களுக்கான 2023 ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களுக்கான நிதிக்கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

அவுஸ்திரேலியா - கனடா அன்பர்கள் வழங்கிய நன்கொடைகளிலிருந்து மாணவர்களுக்கும் அவர்களின் தாய்மார்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கு இந்நிகழ்வு களின்போது மதியபோசன விருந்தும் வழங்கப்பட்டது.

# உக்ரைன் போரை முடித்திட இந்தியா பங்களிக்க முடியும்

## அமெரிக்கத் தூதர் கருத்து




இந்தியப் பிரதமர் மோடி கூறியது போல், இது போருக்கான காலம் இல்லை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். உக்ரைன் தனது சுதந்திரத்தையும் அதன் இறையாண்மையையும்பாதுகாக்க மிகவும் பயங்கரமான விலையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஏராளமான உயிர்கள் பலியாகி இருக்கின்றன. இந்த போரின் விளைவுகள் உக்ரைனின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டவை.

ஐ.நா. சாசனத்தின் கொள்கைகளைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு ஜனநாயக நாட்டிற்கும் பங்கு உண்டு. ஒரு நாட்டின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை இந்திய மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இந்தியத் தலைவர்கள் இந்த அடிப்படைக் கொள்கைகளைப் பற்றி பேசி இருக்கிறார்கள்.

போரால் ஏற்பட்டு வரும் உலகளாவிய தாக்கங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தீர்வுகளைத் தேடுவதற்கு எல்லா இடங்களிலும் உள்ள தலைவர்களை இந்தியா ஊக்குவிக்க வேண்டும். ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் அடிப்படையில் உலகளாவிய ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கான இந்தியாவின் இதுவரையிலான முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

ஜி-20 மற்றும் குவாட் அமைப்புகள் மூலம் இந்தியாவுடன் அமெரிக்கா இணைந்து செயல்பட்டு வருகிறது. இந்தக் கூட்டாண்மைக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். சர்வதேச அளவில் பலதரப்பு ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்வதிலும், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் அடிப்படையிலான உலகளாவிய ஒழுங்கை நிலைநிறுத்துவதிலும் இந்தியாவின் அயராத தலைமைத்துவத்திற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

உலகெங்கிலும் உள்ள மக்களும் ஜனநாயக நாடுகளும் நிம்மதியாக, செழிப்பாக, சுதந்திரமாக இருப்பதை உறுதிப்படுத்த இந்தியா உதவுகிறது, என்று உக்ரைனுக்கான அமெரிக்க தூதர் டிரிட்ஜெட் ஏ பிரிங்க் அந்த உரையாடலில் தெரிவித்தார்.

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வர இந்தியா பங்களிக்க முடியும், என்று உக்ரைனுக்கான அமெரிக்க தூதர் டிரிட்ஜெட் ஏ பிரிங்க் தெரிவித்துள்ளார். அவர், இந்திய பத்திரிகையாளர்கள் சிலருடன் இணையவெளியில் கலந்துரையாடியுள்ளார்.

உக்ரைனில் தலைநகர் கீவில் இருக்கும் நான், போரின் பேரழிவுகளையும் உக்ரேனிய மக்களின் வலிமை மற்றும் பின்னடைவு ஆகிய இரண்டையும் ஒவ்வொரு நாளும் பார்த்து வருகிறேன். சர்வதேசத் தலைமை வகிக்க வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பத்தையும், ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம் என்ற அதன் ஜி-20 கருப்பொருளையும் அர்த்தப்படுத்த வேண்டுமானால் அமைதி மிகவும் முக்கியம்.

உலகப் பொருளாதாரத்தின் மீதும், உணவுப் பாதுகாப்பின் மீதும் இந்தப் போர் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. அதோடு, இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவை குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அடிப்படைக் கொள்கைகள் மீதும் இந்த போர் பரவலான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. ஜி-20 அமைப்பின் தற்போதைய தலைவராக இருக்கும் இந்தியாவுக்கு, உக்ரைன் போர் போன்ற உலகளாவிய பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்கிருக்கிறது.

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பை இந்தியா இன்னும் கண்டிக்கவில்லை. பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரம் மூலம் மோதலைத் தீர்க்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வருகிறது. கடந்த ஆண்டு செப்டம்பர் 16 ஆம் திகதி உஸ்பெக் நாட்டின் சமர்கண்ட் நகரில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் நடந்த இருதரப்பு சந்திப்பின்போது, இது போருக்கான காலம் அல்ல, எனக் கூறி மோதலை முடிவுக்கு கொண்டு வர இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ரஷ்யத் தலைவரைத் தூண்டினார்.

# வெனிசுலாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா தடை - வெளியுறவு அமைச்சர்




வெனிசுலாவுக்கு எதிராக பல்வேறு பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்துள்ளதால் அதன் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்பட்டு இருப்பதாக அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்து கடந்த 1811 அம் ஆண்டு வெனிசுலா சுதந்திரம் பெற்றது. இதனால் கடந்த 2 நூற்றாண்டுகளில் வெனிசுலாவுக்கு எதிராக பல்வேறு பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது. இதன்மூலம் வெனிசுலாவின் வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில், வெனிசுலா சுதந்திரம் அடைந்து 212 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. இதனை முன்னிட்டு தலைநகர் கராகசில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. அப்போது, கடந்த 200 ஆண்டுகளுக்கும் மேலாக தமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாக அமெரிக்காவை வெனிசுலா வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் காஸ்டிலோ கடுமையாகச் சாடியுள்ளார்.

# ஜப்பானில் குழந்தைகள் உள்ள குடும்பங்கள் எண்ணிக்கை ஒரு கோடிக்கும் கீழே சென்றது



ஜப்பானில் 1986 க்குப் பின்னர் முதன்முறையாக குழந்தைகள் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஒரு கோடிக்கும் கீழே சரிந்துள்ளதாக அந்த நாட்டு அரசு வெளியிட்ட அறிக்கையின் வாயிலாகத் தெரியவந்துள்ளது.

கடந்த 1986 ஆம் ஆண்டு முதலாக, ஜப்பான் அரசு தங்கள் நாட்டில் குழந்தைகள் உள்ள குடும்பங்கள் குறித்த புள்ளிவிவரங்களைப் பராமரித்து வருகிறது. அதன் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கின் அறிக்கை தற்போது கிடைத்துள்ளது. இந்தப் புள்ளிவிவரத்தை ஜப்பான் சுகாதார மற்றும் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அதில், ஜப்பானில் குழந்தைகள் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது தெரியவந்துள்ளது. அதன்படி முதன்முறையாக இந்த எண்ணிக்கை ஒரு கோடிக்கும் கீழ் குறைந்துள்ளது. அதாவது, 18 வயதுக்கும் கீழ் உள்ள குழந்தைகளுடன் கூடிய குடும்பங்களின் எண்ணிக்கை 9.9 மில்லியன் ஆக உள்ளது. 2019 ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 3.4 சதவீதம் குறைவாகும்.

மேலும், ஜப்பானில் 49.2 சதவீத வீடுகளில் ஒரேயொரு குழந்தையும், 38 சதவீத வீடுகளில் 2 குழந்தைகளும், 12.7 சதவீத வீடுகளில் 3 அல்லது அதற்கும் மேற்பட்ட குழந்தைகளும் உள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்த ஆண்டுத் தொடக்கத்தில் வெளியான புள்ளிவிவரம் ஒன்று ஜப்பானில் 2022 ஆம் ஆண்டு பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை, 1899 க்குப் பின்னர் முதன்முறையாக 8 லட்சத்துக்கும் கீழ் குறைந்தது என்ற புள்ளி விவரம் வெளியானது.

இதனையடுத்து, பிரதமர் புமியோ கிஷிடோ தலைமையிலான அரசு, ஜப்பானில் குழந்தை வளர்ப்பு வீதத்தை சரிவில் இருந்து மீட்டெடுக்க கடந்த ஜூன் மாதம் பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்தது.

அப்போது, பிரதமர் புமியோ கிஷிடாவின் அதிகாரிகளில் ஒருவரான மசாகோ மோரி, நாட்டில் பிறப்பு விகிதம் இதே போல் குறைந்துகொண்டே இருந்தால் இன்னும் சில காலத்தில் ஜப்பான் என்ற நாடு ஆசிய கண்டத்தில் இல்லாமலேயே போய்விடும். அதனைத் தடுக்க மக்கள் மட்டுமே உதவ முடியும். இந்தப்பேரழிவை ஏற்படுத்தும் போக்கை அவர்கள் மட்டுமே மாற்ற இயலும். ஏனெனில், நம் நாட்டில் குழந்தைப் பிறப்பு வீதம் படிப்படியாகக் குறையவில்லை. தலைகீழாகச் சரிந்து கொண்டிருக்கிறது. இது சமூகத்தைச் சுருக்கி, செயல்பட இயலாமல் ஸ்தம்பிக்க வைத்துவிடும், என்று எச்சரித்திருந்தமை நினைவுகூரத்தக்கது.

# ஐஸ்லாந்தில் 24 மணித்தியாலத்தில் 2,200 நில நடுக்கங்கள் ஏற்பட்டன

ஐஸ்லாந்து தலைநகர் ரெய்க்யவிக்கில் 24 மணி நேரத்தில் 2,200 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக அந்தநாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ரெய்க்யவிக் பகுதியில் 24 மணி நேரத்தில் 2,200 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. இந்த நிலநடுக்கங்கள் நாட்டின் தென் பகுதியில் பரவலாக உணரப்பட்டுள்ளன. இந்த நிலநடுக்கங்கள் எரிமலைச் சீற்றம் விரைவில் ஏற்படக்கூடும் என்பதற்கான சமிக்ஞைகளாக கருதப்படுகின்றன. இதில் பல நிலநடுக்கங்கள் மிதமான (ரிச்டர் அளவில் 4.1 ) அளவில் பதிவாகியுள்ளன, என்று அந்த ஆய்வு மையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் ஐஸ்லாந்துதான் எரிமலைகள் செயல்பாட்டில் உள்ள பகுதியாக உள்ளது. ஐஸ்லாந்தானது வடக்கு அட்லாண்டிக் தீவு, மத்திய அட்லாண்டிக் ரிட்ஜ், ஐ யூரேசிய மற்றும் வட அமெரிக்க டெக்டோனிக் தகடுகளை பிரிக்கிறது. இதன் காரணமாக ஐஸ்லாந்தில் ஏற்படும் நிலநடுக்கங்கள் நிச்சயம் அச்சத்தைத் தரக்கூடியவை என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னர் 2010 ஆம் ஆண்டு ஏப்ரலில், ஐஸ்லாந்தில் ஏற்பட்ட எரிமலை வெடிப்புக் காரணமாக 1,00,000 விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டன. இதனால் ஒரு கோடிக்கும் அதிகமான பயணிகள் சிக்கித் தவித்தனர். 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளிலும் ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்புகள் ஏற்பட்டன. இந்த நிலையில் ரெய்க்யவிக்கில் ஏற்பட்ட நில நடுக்கங்கள் நிச்சயம் கண்காணிக்கப்பட வேண்டியை என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# சீனாவின் வடக்குப் பகுதியை வெப்பம் வாட்டுகிறது வீட்டிலிருந்து பணிபுரிய ஊழியர்களுக்கு அறிவுறுத்தல்

சீனாவின் வடக்குப் பகுதியில் நிலவும் கடும் வெயில் காரணமாக, அரச, தனியார் நிறுவன ஊழியர்கள் வீட்டிலிருந்து பணி புரியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சீனாவின் பீஜிங் உள்ளிட்ட நகரங்களில் கடந்த சில நாட்களாக வெப்ப நிலை 40 பாகை செல்சியஸை தொடுகிறது. இதனால் வயதானவர்கள், உடல் நிலை சரியில்லாதவர்கள் வெளியே வரவேண்டாம், என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், அதிதீவிர வெப்பம் காரணமாக சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து நாட்களாக பீஜிங்கில் வெப்ப நிலை 35 பாகை செல்சியஸ/க்கு அதிகமாக பதிவாகி உள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1961 ஆம் ஆண்டுக்குப் பிறகு தீவிர வெப்பத்தை சீனா எதிர்கொண்டுள்ளது.

சீனாவின் வடக்குப் பகுதி தீவிர வெப்பத்துக்கு உள்ளான நிலையில், எதிர்மாறாக தென் மாகாணங்களில் தீவிர மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஜூன் மாதத்தில் மட்டும் சீனா 14 நாட்கள் தீவிர வெப்ப நிலையை எதிர்கொண்டுள்ளது. இனி வரும் ஒவ்வொரு மாதமும் 4 நாட்கள் வெப்பம் தீவிரமாக இருக்கும் என்று சீன வானிலை மையம் தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றத்தின் தீவிரத்தால் உலகின் பல நாடுகளில் வெப்ப நிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. முன்னதாக, கடந்த ஜூலை 3 ஆம் திகதிதான் உலகின் அதிக வெப்பச் சராசரி கொண்ட நாள் என்று கணக்கிடப்பட்டுள்ளதாக சூழலியல் ஆய்வுக்கான அமெரிக்க மையம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் பகுதி இராணுவ முகாம்களை அகற்றினால் மேலும் பல மனிதப் புதைகுழிகளை கண்டறியலாம்



முல்லைத்தீவு மற்றும் மன்னார் மனிதப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேசம் தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழர் பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றினால், மேலும் பல மனிதப் புதைகுழிகளைக் கண்டறிய முடியும் என்றும் அச்சங்கத்தினர் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர் இன்று, மன்னார் பசார் பகுதியில் போராட்டமொன்றில் ஈடுபட்டனர். மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

## பொலிஸ்மா அதிபர் இல்லாமல் இயங்கும் பொலிஸ் திணைக்களம்

பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவின் பதவிக் காலம் முடிந்து, அவருக்கு வழங்கப்பட்ட கால நீடிப்பும் முடிந்து 11 நாட்கள் ஆகின்றன. ஆயினும், இன்னும் புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படவில்லை.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறு பொலிஸ்மா அதிபர் ஒருவர் இல்லாமல் பொலிஸ் திணைக்களம் இயங்குகின்றமை பல தரப்பாலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த 26 ஆம் திகதி சந்தன விக்கிரமரத்ன ஓய்வுபெற்றுவிட்ட நிலையில், அலுவலகத்திலிருந்த அவரது பொருட்களையும்கூட அவர் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆயினும், பிரியாவிடை நிகழ்வுகூட அவருக்கு நடத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு, அடுத்த பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கு இன்னும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக பொலிஸ்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸ் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடியபோதும் எதுவித முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

பொலிஸ்மா அதிபருக்குத் தகுதியான எவரும் சிபாரிசு செய்யப்படாமையே இதற்குக் காரணம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

## உயர்தர, சாதாரண தரத்துக்கான பரீட்சைக் காலங்கள் அறிவிப்பு

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் நடத் தப்படும் காலப் குதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இது தொடர்பாகக் குறிப்பிட் டுள்ளார். இதனடிப்படையில், உயர் தரப் பரீட்சையை இந்த ஆண்டின் இறுதியிலும், சாதாரணத் தரப் பரீட்சையை 2024 ஆம் ஆண்டின் முதல்காலாண்டிலும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.




## இடியப்பத் தொழில் செய்யும் பெண்களுக்கு பனையோலை இடியப்பத் தட்டுக்கள் வழங்கல்



(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இடியப்பத்தை குடிசை கைத்தொழிலாக மேற்கொள்ளும், தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு லயன்ஸ் கழகத்தின் ஒருங்கிணைப்புடனும் பிரதேச தனவந்தர்களின் உதவியுடனும் பனையோலையினால் செய்யப்பட்ட இடியப்பத் தட்டுகள் நேற்றுப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுகளினால் பல்வேறு விதமான நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் விதமாகவும், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போசணையான மற்றும் நஞ்சற்ற உணவுத் திட்டத்தின் கீழும் நிந்தவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம். ரயீஸ் அவர்களினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம். ரயீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் கலந்துகொண்டார். கௌரவ அதிதியாக பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பி.ஏ. வாஜித், சிறப்பு அதிதிகளாக தொற்றா நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரிவைத்தியர் எம்.ஐ.எம்.எஸ்.இர்சாத், சுற்றுச்சூழல் மற்றும் தொழில் வாண்மைப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எஸ்.எம்.பௌசாத், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## புதிய உதவித் திட்டம் நடைமுறைக்கு வரும் வரையில் விசேட தேவையுடையோரின் கொடுப்பனவு தொடரும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் கீழ், முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவுகளை புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும் வரை தொடர்ந்து வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும், அஸ்வெசும திட்டத்தை நடைமுறைப்படுத்தினாலும் அது இதில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்காக, சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் ஒரு பகுதியாக ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டம், இராஜாங்க அமைச்சர் சேமசிங்கவின் கீழ், நிதியமைச்சு உட்பட பல்வேறு அரச நிறுவனங்களின் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தத் திட்டம் தொடர்பாக இதுவரையில் 760,000 க்கும் அதிகமான முறையீடுகளும், 10,000 க்கும் அதிக ஆட்சேபனைகளும் மக்களால் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் மிகவும் தேவைப்படும் நபர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கும், வளங்களின் சமமான விநியோகத்தை உறுதி செய்வதற்குமாக கூடிய விரைவில் மதிப்பீடு செய்யப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.07.2023இல் வெளியிடப்பெற்றது.